(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 13(9).]

# பாராளுமன்றம்

## 13 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 மாச்சு 13 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2015 ஏப்பிறல் 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5092/ '14

கௌரவ அனுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 5 வருடங்களில் இலங்கை அரசினால் உகண்டா அரசுக்கு ஏதேனும் நிதியுதவிகள் அல்லது கருத்திட்டங்களுக்கான உதவிகள் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இவ் உதவிகளின் நிதி ரீதியான பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) அந்நாட்டுக்கு ஏதேனும் நிர்மாணிப்புக் கருத்திட்டம் வழங்கப்பட்டிருப்பின் இந் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை யாது என்பதையும்;

(iv) இந் நிதியுதவி அல்லது கருத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதன் நோக்கம் யாது என்பதையும்;

(v) இலங்கை அரசு பெருமளவில் வெளிநாட்டுக் கடன்களை செலுத்த வேண்டியிருக்கையில் மேற்குறிப்பிட்டவாறு வேறு நாடுகளுக்கு உதவியளித்தல் பயனற்றதொரு செயற்பாடு அல்லவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5774/ '14

கௌரவ பாலித தெவரப்பெரும,— அரசாங்க நிருவாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்துகம பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில், ஹொரவள உப அலுவலக எல்லையில், ஹொரவள தியகிதுலகொட வத்த, மத்துகம-அளுத்கம வீதிக்கு முகப்பாக அமைந்துள்ள திரு. அமரபால ஜயநெத்திக்குச் சொந்தமான 2.8 பேச்சஸ் பரப்புடைய சிறிய காணியொன்றில் நிரந்தரக் கட்டம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான திட்டவமைப்புக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கட்டடம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அயலிலுள்ள வீடுகளுக்குச் செல்லும் வீதிக்கும், அயலில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கும் இடையூறு ஏற்படும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடத்தின் திட்டவமைப்பை அங்கீகரித்தல் அரசாங்கத்தின் சட்டதிட்டங்களின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அந்தக் கட்டடத்தின் திட்டவமைப்பிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள நடைமுறை யாதென்பதையும்;

(iii) அந்த அங்கீகாரம் எத்தரப்பின் தேவைக்கமைய வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) அரசாங்கத்தின் சட்டதிட்டங்களின்படி வீடு அல்லது கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பத்றகான அனுமதியை வழங்குவதற்காக காணப்பட வேண்டிய குறைந்தபட்ச நிலப்பரப்பு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2015 ஏப்பிறல் 08, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5424/ '14

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) புகையிரத திணைக்களத்தின் பயிற்சிபெற்ற கைவினை அடிப்படையிலான சேவைப் பிரமாணங்களின் பிரகாரம், 1997.01.01 தொடக்கம் சகல பயிற்சி பெற்ற கைவினைஞர்களும் மேற்படி சேவையில் உள்வாங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) வேறு எந்தவொரு சேவைப் பிரமாணங்களிலும் காணப்படாத நிபந்தனையாக மேற்படி சேவையின் பிரிவுகள் மற்றும் பதவியுயர்விற்கு ஏற்ப "அ" பிரிவிலுள்ள கைவினைஞர்களுக்கு முதல் வகுப்பிற்கான பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்ற போது 6:1 விகிதாசாரம் பின்பற்றப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்படி விகிதாசாரம் 6/2006 சுற்றறிக்கை அமுல்படுத்தப்படுகின்றபோது மாற்றப்படுமென பல சந்தர்ப்பங்களில் அதிகாரிகள் இணங்கியிருப்பதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) எனினும், இற்றைவரை 6/2006 இன் பிரகாரம் பதவியுயர்வு நடைமுறையைத் தயாரிப்பதற்கு தவறியுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், இதற்குரிய காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி பிரச்சினையின் காரணமாக சம்பள உயர்வின் உச்ச வரம்பில் உள்ள பெரும் எண்ணிக்கையான ஊழியர்களுக்கு அநீதி நேரிடுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5448/ '14

கௌரவ அநுர திஸாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டு காலத்தில் தேசிய லொத்தர் சபையினால் ஈட்டிக்கொள்ளப்பட்ட இலாபம் எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய லொத்தர் சபையினால் நடாத்திவரப்படுகின்ற லொத்தர் வகைகள் யாவை என்பதையும்;

(ii) கடந்த முறை சீட்டிழுப்பு நடாத்தப்பட்ட மெகா லொத்தர் பற்றி விளம்பரம் செய்யப்பட்டதற்கிணங்க, முதலாம் பரிசுக்கு ரூபா 5 கோடியும், ஏனைய பரிசுகளாக 40 ஜீப் வண்டிகளும் சீட்டிழுப்பு நடாத்தப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட பரிசு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டதா என்பதையும்;

(iii) தற்போது ஏனைய ஒவ்வொரு லொத்தரும் சீட்டிழுக்கப்பட்டு வெளியிடப்படுகின்ற பரிசுகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படும் பரிசுத் தொகை குறைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு குறைக்கப்பட்டிருப்பின் அதன் எண்ணிக்கை ரீதியிலான பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5846/ '14

கௌரவ மொஹமட் அஸ்லம்,— முஸ்லிம் சமய அலுவல்கள், தபால் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இலங்கை வக்பு சபையில் R/0682/T/036 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஜும்ஆ பள்ளிவாசலுக்கு இறுதியாக சட்டபூர்வமாக நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட பள்ளிவாசலுக்குரிய அசைவற்ற ஆதனங்களின் (காணிகள், வீடுகள் மற்றும் கடைகள்) எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இந்த ஆதனங்களுக்கான உரித்தாவணங்கள் (உறுதிகள்) பள்ளிவாசலின் பெயரில் உள்ளனவா என்பதையும்;

(iii) இந்த ஒவ்வொரு ஆதனத்தையும் வாடகை அடிப்படையில் அல்லது குத்தகைக்கு வழங்கும்போது வக்பு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதா என்பதையும்

(iv) ஆமெனில், இவ்வுடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட திகதிகள் மற்றும் உரிய குத்தகையாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு ஆதனத்தையும் குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினதும், இலங்கை வக்பு சபையினதும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5858/ '15

கௌரவ சாந்த பண்டார,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தற்போது நாட்டினுள் நாளாந்தம் பயன்படுத்தப்படும் டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருள்களின் சராசரி அளவு எத்தனை லீட்டர்கள் என்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு எரிபொருள் வகைக்கும் தற்போது அறவிடப்படுகின்ற வரித் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) எதிர்வரும் காலத்தில் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் விதத்தில் மேற்படி வரிகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்கமைய ஒவ்வொரு எரிபொருள் லீட்டருக்கும் உரிய சந்தை விலை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5890/ '15

கௌரவ லசந்த அலகியவன்ன,— நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நாடு பூராவும் அமைக்கப்பட்டுள்ள வீதிகளின் நீளம் எத்தனை கிலோமீட்டர்களென்பதையும்;

(ii) 2015/01/01 ஆம் திகதியாகும்போது மேற்படி வீதிகளில் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) மேலும் அபிவிருத்தி செய்வதற்குள்ள வீதிகளின் மொத்த நீளம் எத்தனை கிலோமீட்டர்கள் என்பதையும்;

(iv) அபிவிருத்தி செய்வதற்குள்ள வீதிகளை எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்வதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5897/ '15

கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன,— முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது தொழிற்படுகின்ற மேற்தர தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவிசாவளை தேர்தல் தொகுதியில், சீதாவக்கபுர புதிய மேற்தர தபால் அலுவலகத்துக்கான கட்டிட வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், மேற்படி மேற்தர தபால் அலுவலகத்தினை எதிர்வரும் சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் மக்களுக்கு கையளித்து சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவிசாவளை தபால் ஆளுகைப் பிரதேசத்தை சீதாவக்க தபால் ஆளுகைப் பிரதேசமாக பெயரிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேலே(அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தபால் அலுவலகம் அங்குரார்ப்பணம் செய்யப்படுவதைத் தொடர்ந்து குறித்த ஆளுகைப் பிரதேசம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டுகின்ற நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5859/ '15

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த காலகட்டத்தினுள் எமது நாட்டின் கல்வி முறைமையில் விரிவானதொரு மாற்றம் இடம்பெற்றதென்பதையும்;

(ii) தற்போது 1000 இரண்டாம் நிலை பாடசாலைகளும் 5000 ஆரம்பப் பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள மஹிந்தோதய விஞ்ஞான கூடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இற்றைவரை மேற்படி விஞ்ஞான கூடங்களில் மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ள விஞ்ஞான கூடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) எஞ்சிய மஹிந்தோதய விஞ்ஞான கூடங்களை விரைவாக மாணவர்களின் பாவனைக்கு கையளிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2015 ஏப்பிறல் 09, வியாழக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5118/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின் வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குக்குலேகங்க மின் உற்பத்தி நிலையத்திலுள்ள மின் பிறப்பாக்கிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு இயந்திரத்தினதும் மின் உற்பத்தி ஆற்றல் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2013 ஆம் ஆண்டு பூராகவும் மேற்படி அனைத்து மின் பிறப்பாக்கிகளும் இயங்கியதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி மின் பிறப்பாக்கிகளில் செயலிழந்திருந்த இயந்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு இயந்திரமும் செயலிழந்திருந்த காலம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

(iv) மேற்படி மின் பிறப்பாக்கிகள் செயலிழப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) எதிர்காலத்தில் மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் இயந்திரங்கள் செயலிழக்காதிருப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5500/ '14

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையின் ஊழியரொருவருக்கு குறைந்த பட்சம் ரூபா 96,000 தொகை மற்றும் அதிகபட்சம் ரூபா 265,000 தொகை என்ற ரீதியில் இழப்பீட்டுத் தொகையை செலுத்தி 1990.03.31 ஆம் திகதியிலிருந்து மேற்படி நிறுவனம் மூடப்படுமென அப்போதைய அரசாங்கத்தின் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரினால் 1990.03.23 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டதென்பதையும்;

(ii) அவ்வாறு அறிவிக்கப்பட்ட போதிலும் மேற்படி ஊழியர்களுக்கு ரூபா 50,000 மாத்திரமே செலுத்தப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி நிலைமையின் கீழ் இவர்கள் பெரும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளார்களென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையில் சேவையாற்றிய மேலே குறிப்பிட்ட ஊழியர்களுக்கு எஞ்சிய இழப்பீட்டுத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப்போதைய ஆற்றுப்பள்ளத்தாக்குச் சபைக்கு சொந்தமாக இருந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் உரிமை, அச் சந்தர்ப்பத்தில் அங்கு குடியிருந்த ஊழியர்களுக்கு வழங்கப்படுமென்றும், வீடுகள் இல்லாத ஏனைய ஊழியர்களுக்கு காணிகள் பெற்றுக்கொடுக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்ட கூற்றின் பிரகாரம், இன்றளவில் சகல ஊழியர்களுக்கும் வீடுகள் அல்லது காணிகள் வழங்கி முடிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வீடுகள் அல்லது காணிகளுக்கு இன்றளவில் உறுதிப் பத்திரங்கள் வழங்கி முடிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5847/ '14

கௌரவ மொஹமட் அஸ்லம்,— முஸ்லிம் சமய அலுவல்கள், தபால் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் வக்பு சபையில் R/0682/T/036 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஜும்ஆ பள்ளிவாசலின் அசைவற்ற ஆதனங்களை (காணி, வீடுகள், கடைகள்) கையாளுகையில் ஏற்பட்டதாகக் கூறப்படும் ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் ஒரு விசாரணை நடத்துவாரா என்பதையும்;

(ii) இந்தப் பள்ளிவாசலுக்குரிய ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் செலவு மீதி தொடர்பாக விசேட புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட வக்பு ஆதனங்கள் கையாளப்படுகையில் மோசடியாக தனிநபர்களின் பெயரில் உறுதிகள் தயாரிக்கப்பட்டு கையுதிர்க்கப்பட்ட ஆதனங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய ஆதனங்களை தடைசெய்வதற்கும் சம்பந்தப்பட்ட ஆட்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் ஆலோசனை வழங்குவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5865/ '15

கௌரவ சாந்த பண்டார,— உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டு மக்களில் பெரும்பாலானோர் சோற்றை உணவாக உட்கொள்கின்றார்கள் என்பதையும்;

(ii) அதற்கமைய நாட்டில் அரிசிக்கு பெரும் கேள்வி நிலவுகின்றது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) அரிசியின் விலையைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் துரித நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5894/ '15

கௌரவ லசந்த அலகியவன்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க பாடசாலைக் கட்டமைப்புக்குத் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அரசாங்க பாடசாலைகளில் 2015.01.01 ஆம் திகதியளவில் காணப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) ஆசிரியர் மிகை அல்லது ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுமெனில் அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

(iv) ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுமெனில் அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5898/ '15

கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன,— சுற்றுலா, விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அவிசாவளை தேர்தல் தொகுதியின், சீத்தாவகபுர நகர சபை ஆளுகைப் பிரதேசத்தில், பிலிப் குணவர்தன விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் இரண்டாம் கட்டமான விளையாட்டு மண்டபத்தை நிர்மாணித்தல் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி விளையாட்டு மண்டபத்தை மக்களுக்கு கையளிக்கவுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் இரண்டாம் கட்டத்தை மக்களுக்கு கையளித்ததன் பின்னர் அதன் அபிவிருத்தி மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான சீத்தாவகபுர நகர சபையின் கோரிக்கைக்கு அமைவாக இவ்விளையாட்டுக் கட்டிடத் தொகுதியை மேற்படி நகர சபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5904/ '15

கௌரவ லக்ஷ்மன் யாபா அபேவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒரு கிலோகிராம் நெல்லுக்கு ரூபா 50.00 ஐ நிலையான விலையாக வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்குறிப்பிட்ட முன்மொழிவு 2015ஆம் ஆண்டினுள் அமுலுக்கு வரும் மாதம் மற்றும் திகதி யாது;

(iii) மேற்படி முன்மொழிவை அமுல்படுத்தும்போது, ஒவ்வொரு நெல் கிலோகிராமையும் மேலே குறிப்பிட்டுள்ள விலையில் கொள்வனவு செய்யுமாறு சகல நெல் கொள்வனவு நிறுவனங்களுக்கும் தனியார் கொள்வனவாளர்களுக்கும் கட்டளை பிறப்பிப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) குறித்துரைக்கப்பட்ட நிலையான விலையில் நெல்லைக் கொள்வனவு செய்யாதவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5914/ '15

கௌரவ சுசந்த புஞ்சி நிலமே,— மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015.01.23 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த தினமொன்றின் இரவு மொரவெவ, மஹதிவுல்வெவ II ஆம் கட்டத்தில் அமைந்துள்ள ஶ்ரீ இந்திராராம மஹா விகாரை பொலிஸாரால் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விகாரையில் வசிக்கும் பீடத்தின் நிறைவேற்றுச் சபை அங்கத்தவரும் கௌரவ சங்க சபை அங்கத்தவருமாகிய வண. பொல் ஹேன்கொட உபரதன நாயக்க தேரரின் பாதுகாவலர்களது வீடுகள் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(ii) மேற்படி பரிசோதனைகளுக்கு அனுமதியளித்தவர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி பரிசோதனையில் பங்கேற்ற உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) நல்லாட்சிக் கொள்கையின் அடிப்படையில் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பொலீசார் அல்லது வேறு பாதுகாப்புப் பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களால் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த விகாரைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதன் நோக்கம் யாதென்பதையும்;

(iv) மேற்படி நோக்கம் நிறைவேறியுள்ளதா என்பதையும்;

(v) பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்ட விகாரைகளில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட விகாரைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(vi) அவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

5867/ '15

கௌரவ சாந்த பண்டார,— பொது நிருவாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரதேச அரசாட்சியில் மிக முக்கியமானதொரு பணியை ஆற்றுகின்ற பிரதேச செயலாளர் தமது பிரிவினுள் வதிபவராயிருத்தல் கடமை நடவடிக்கைகளுக்கு மிக உகந்ததாகுமென்பதையும்;

(ii) தேவையான வதிவிட வசதிகள் இல்லாததன் காரணத்தினால் நீண்ட காலமாக அலவ்வ பிரதேச செயலாளருக்கு தமது செயலகப் பிரிவில் வதிவதற்கு முடியாதுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) அலவ்வ பிரதேச செயலாளருக்கு தமது பிரிவினுள் வதிவதற்குத் தேவையான வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# 2015 ஏப்பிறல் 10, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

5120/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 / 2014 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக மாணவர்களுக்காக 60 விடுதிகளை நிர்மாணிப்பதற்கு உயர் கல்வி அமைச்சு ஏதேனும் நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை செய்துகொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிர்மாணிப்புகள் தொடர்பாக உடன்படிக்கை செய்துகொண்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணிப்பு நிறுவனங்களை தெரிவுசெய்கின்றபோது ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல் மேற்படி நிறுவனங்களை தெரிவு செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விடயங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்துக்கும் நிர்மாணிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ள விடுதிகளின் எண்ணிக்கை மற்றும் மேற்படி நிர்மாணிப்புகள் தொடர்பாக உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) ஒவ்வொரு உடன்படிக்கைதாரரும் விடுதி நிர்மாணிப்பை பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்துள்ள திகதி யாதென்பதையும்;

(iii) நிர்மாணிக்கப்படும் ஒவ்வொரு விடுதியிலும் தங்குமிட வசதி வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு விடுதியையும் நிர்மாணிப்பதற்காக உயர் கல்வி அமைச்சு செலவிடும் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5848/ '14

கௌரவ மொஹமட் அஸ்லம்,— அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில், இல. 32 குப்பியாவத்த மேற்கு பிரிவைச் சேர்ந்த, மாளிகாகந்த ஒழுங்கை, 59 மற்றும் 59/8 ஆம் ஆதன வரி இலக்கங்களைக் கொண்டுள்ள இடத்திற்கு அருகிலுள்ள பிரவேசப் பாதையில் அத்துமீறிய நிர்மாணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருப்பதால் பிரதேசவாசிகளுக்கு பலவிதமான இடையூறுகள் ஏற்படுகின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) கொழும்பு மாநகர சபையின் சில உத்தியோகத்தர்களது அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்படி சட்டவிரோதமான நிர்மாணிப்பினை அகற்றி குடியிருப்போர்களின் பிரவேசப் பாதையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5868/ '15

கௌரவ சாந்த பண்டார,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டிற்கு பெற்றோலியம் இறக்குமதி செய்யப்படுதல் சார்பில் பெரும் தொகை பணத்தை வெளிநாடுகளுக்கு செலுத்த நேரிடுகின்றதென்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அனைத்து எரிபொருள் வகைகளினதும் இறக்குமதிக்காக ஏறக்குறைய வருடாந்தம் செலவிடப்படும் பணத்தொகை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்கு உரித்தான நிலப்பரப்பினுள் அல்லது கடற்பரப்பினுள் எண்ணெய்ப் படிமங்கள் காணப்படுவதாக விடுக்கப்பட்டுள்ள கூற்றுக்களில் உண்மைத்தன்மை காணப்படுகின்றதா;

(ii) ஆமெனில், குறித்த எண்ணெய்ப் படிமங்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை;

(iii) மேற்படி எண்ணெய்ப் படிமங்களை அகழ்வதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5905/ '15

கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒரு கிலோகிறாம் இறப்பருக்கு ரூபா 350.00 ஐ உத்தரவாத விலையாகப் பெற்றுக்கொடுக்க முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டினுள் மேற்படி முன்மொழிவு அமுலுக்கு வரும் மாதம் மற்றும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி முன்மொழிவை அமுல்படுத்துபோது ஒவ்வொரு கிலோகிராம் இறப்பரையும் மேலே குறிப்பிட்டுள்ள விலையில் கொள்வனவு செய்யுமாறு இறப்பர் கொள்வனவு செய்யும் சகல நிறுவனங்களுக்கும் கட்டளை பிறப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறித்துரைக்கப்பட்ட நிலையான விலையில் இறப்பரை கொள்வனவு செய்யாத நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) உலக சந்தையில் ஏற்படும் இறப்பர் விலை வீழ்ச்சிக்கு ஒப்பீட்டளவில், இலங்கையில் இறப்பர் விலை வீழ்ச்சி அடையும் சந்தர்ப்பங்களில் மேலே குறிப்பிடப்பட்ட நிலையான விலையில் இறப்பரை கொள்வனவு செய்வதன் காரணமாக இறப்பர் கொள்வனவாளர்களுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்வதற்கு நிவாரண உதவி வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிவாரண உதவி வழங்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iv) நிவாரண உதவி வழங்குவதற்கு மேலதிகமாக குறித்த கொள்வனவாளர்களுக்கு வழங்கப்படும் வேறு நிவாரணங்கள் உள்ளனவா என்பதையும்;

(v) மேற்படி நிவாரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5915/ '15

கௌரவ சுசந்த புஞ்சி நிலமே,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறந்த நிர்வாகத்தினூடாக திருகோணமலை இ.போ.ச. டிப்போவின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்த அதன் முகாமையாளர் திரு. விஜித்த தர்மசேனவை தகாத வார்த்தைகளால் ஏசி இவரது சேவை நிலையத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளார் என்பதையும்;

(ii) போக்குவரத்து விடயம் உரித்தாகாத அமைச்சர் ஒருவரின் நேரடி தலையீட்டின் அடிப்படையில் அரசியல் காரணங்களால் மேற்படி ஏசுதல் மற்றும் விரட்டியடித்தல் நடைபெற்றுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி பரிசோதனையில் பங்கேற்ற உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி சம்பவம் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் விசாரணையை நடத்தி பாதிப்புக்குள்ளான மேற்படி டிப்போ முகாமையாளருக்கு நீதியை நிறைவேற்றிக் கொடுப்பாரா என்பதையும்;

(ii) 2015 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்ததன் பின்னர் இதுவரை முறைகேடான அழுத்தங்கள் அல்லது வேறு ஏதேனும் வழிமுறைகள் மூலம் பதவிகளிலிருந்து விலக்கப்பட்டு அல்லது அச்சுறுத்தப்பட்டு பதவி விட்டு நீங்கிச் சென்றதாக கருதப்படும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ள இ.போ.ச. டிப்போ முகாமையாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இவர்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள் மற்றும் ஏற்புடைய டிப்போக்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி முறைகேடான செயற்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

5574/ '14

கௌரவ அஜித் மான்னப்பெரும,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் கோட்டை புகையிரத நிலையத்தின் பிரதான உணவகத்தை கொண்டுநடத்துவதற்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்காக முன்வந்த கேள்விப்பத்திரதாரர்கள் யாவரென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கேள்விப்பத்திரதாரும் சமர்ப்பித்த விலைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) மேற்படி கேள்விப்பத்திரதாரர்களில் குறித்த அலுவலுக்காக தெரிவு செய்யபட்ட கேள்விப்பத்திரதாரர் யாரென்பதையும்;

(v) மேற்படி தெரிவு மேற்கொள்ளப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி உணவகத்தை கொண்டுநடத்துபவர் யாரென்பதையும்;

(ii) மேற்படி நபருக்கு குறிப்பிட்ட உணவகத்தை கொண்டுநடத்துவதற்கு வாய்ப்பளிக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5849/ '14

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1995 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழக கலை பீடத்தில் ஆரம்பிக்கப்பட்ட அரபு மொழி மற்றும் இஸ்லாமிய நாகரிகம் கற்பிக்கும் பிரிவில் விரிவுரையாளர்கள், எழுதுநர்கள் மற்றும் எழுதுநர் உதவியாளர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றமையை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்புவற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5869/ '15

கௌரவ சாந்த பண்டார,— வீடமைப்பு, சமூர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இந்நாட்டில் உள்ள நிரந்தர வீடற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி குடும்பங்களின் எண்ணிக்கை மாவட்டங்களுக்கமைய வெவ்வேறாக யாது;

(iii) வீடற்ற குடும்பங்களுக்கு வீடுகளை வழங்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5912/ '15

கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒரு கிலோகிராம் பச்சை தேயிலைக் கொழுந்துக்கு ரூபா 80.00 ஐ நிலையான விலையாகப் பெற்றுக்கொடுக்க முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டினுள் மேற்படி முன்மொழிவு அமுலுக்கு வரும் மாதம் மற்றும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி முன்மொழிவை அமுல்படுத்துபோது ஒவ்வொரு கிலோகிறாம் பச்சை தேயிலைக் கொழுந்தையும் மேலே குறிப்பிட்டுள்ள விலையில் கொள்வனவு செய்யுமாறு சகல தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும் கட்டளை பிறப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறித்துரைக்கப்பட்ட நிலையான விலையில் தேயிலைக் கொழுந்தை கொள்வனவு செய்யாத தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) உலக சந்தையில் ஏற்படும் தேயிலை விலை வீழ்ச்சிக்கு ஒப்பீட்டளவில், இலங்கையில் தேயிலை விலை வீழ்ச்சி அடையும் சந்தர்ப்பங்களில் மேலே குறிப்பிடப்பட்ட நிலையான விலையில் தேயிலைக் கொழுந்தை கொள்வனவு செய்வதன் மூலம் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்வதற்கு நிவாரண உதவி வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிவாரண உதவி வழங்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iv) நிவாரண உதவி வழங்குவதற்கு மேலதிகமாக மேற்படி தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் வேறு நிவாரணங்கள் உள்ளனவா என்பதையும்;

(v) மேற்படி நிவாரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?